**IN THE COURT OF JUDICIAL MAGISTREATE, ERANIEL**

## DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure, 1973/Chapter XXV of BNNS 2023, and Rule 42 and Judicial Form No. 53 of Criminal Rules of practice 2019 )

## C.C.No. 457/2013 P.W. 6/L.W.8

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | திருமதி. சுசீலா | **Calling** | : | |
| **Father's Name** | : | க/பெ. | **Age** | : | |
| **Village** | : | | | | |
| **Taluk** | : | | | | |

**Solemnly affirmed in accordance with the provisions of Section 4 of Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the day 12.03.2025.**

**அரசுத்தரப்பு முதல் விசாரணை :**

**2, 4 வது குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் ஆஜரில்லை. மேற்படி ஆஜரின்மை நீதியின் நலன் கருதி கு.வி.மு.ச 1973 பிரிவு 317(1)ன் கீழ் அனுமதிக்கப்படுகிறது. 3, 5 வது குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் ஆஜர். குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் ஆஜர்**

1. நான் மேற்கண்ட முகவரியில் வசித்து நலவாரியத்தில் வேலைச் செய்து வருகிறேன். புகார்தாரரை எனக்குத் தெரியும். உஷா எனக்கு சகோதரி ஆவார். அ.சா1 பேபி எனக்கு சித்தியாவார். 21.03.2010 ம் ஆண்டு செல்வத்திற்கும் உஷாவிற்கும் திருமண நிச்சயதார்த்தம் நடைபெற்றது. நிச்சயதார்த்தின் போது பேபி வீட்டார் செல்வத்திற்கு மூன்றேகால் பவுன் நகை கொடுத்தார்கள். 18.04.2010 ல் திருமணம் நடைபெற்றது. திருமணத்தின் போது 20 பவுன் நகை போட்டார்கள்.

2. அதன் பிறகு அவர்கள் வீட்டில் பிரச்சினை ஏற்பட்டது. உஷா தன்னை மேலும் 1 இலட்சம் ரூபாய் கேட்டு பிரச்சினை செய்ததாக என் சித்தியிடம் சொன்னார். நான் அவர்கள் வீட்டிற்கு போயிருந்தபோது என்னிடமும் சொன்னார். பின்னர் அந்த வழக்கு குளச்சல் மகளிர் ஸ்டேசனுக்கு வந்தது. அப்போதும் நான் போயிருந்தேன்.

3. பேபி சித்தி ரூபாய் தரமுடியாது என்று சொன்னார்கள். ரூபாய் தந்தால் தான் என்னுடன் வைத்துக்கொள்வேன் என்று செல்வம் பேசினார். அதனால் ஒன்றுக்கொன்று அந்தயிடத்தில்

தகராறு நடந்தது. அப்புறம் கோர்டுல போய் பார்த்துக்க சொன்னங்க, இது தான் எனக்குத் தெரியும்.

போலீசார் என்னை விசாரித்தார்கள்.

<u>**குறுக்கு விசாரணை**</u> :

என்னை குளச்சல் காவல்நிலையத்தில் என்றைய தினம் என்னை எங்கு வைத்து எந்த காவல் அதிகாரி என்னை விசாரித்தார் என்றால் ஞாபகமில்லை. நான் CPIML கட்சியில் இருக்கிறேன். வழக்கின் சாட்சிகள் அனைவரும் எனது உறவினர்கள் மற்றும் தெரிந்த நபர்கள் என்றால் சரிதான். நான் சொன்ன நகைகள் குறித்த எடையை நான் அளவீடு செய்யவில்லை. ரசீதைப் பார்த்தேன். அந்த ரசீது என்ன கடையிலிருந்து எப்போது வாங்கப்பட்டது என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் ஞாபகமில்லை.

2. நான் 2008 ம் ஆண்டு கட்சியில் சேர்ந்தேன். நகைகள் சுத்தமான தங்கமா என்று நான் உரசிப்பார்க்கவில்லை. அதற்கான ரசீது எதுவும் என்னிடம் இல்லை. என்னுடன் குளச்சல் மகளிர் காவல்நிலையத்திற்கு பேபி, ஹேமா, கிருஷ்ணன், வினு ஆகியோர்கள் வந்தார்கள். சித்தி வீட்டிற்கு என்றையதினம் சென்றேன்என்று எனக்கு ஞாபகமில்லை. உஷாவிற்கு ஏற்கனவே திருமணாகியிருந்த விவரம் எனக்கு தெரியுமா என்றால் திருமணம் ஆகவில்லை. உஷாவின் கணவர் திருமணத்திற்கு பிறகு வெளிநாடு சென்ற காலகட்டத்தில் உஷாவிற்கு திருமணம் நடைபெற்றதா என்றால் இல்லை.

3. எனது வீட்டிற்கும் எனது சித்தி வீட்டிற்கும் இடையே 15 கி.மீ தூரம் இருக்கும். நான் ஒரு தெளிந்த அரசியல் வாதி என்றால் சரிதான். எனக்கு எப்போதும் உறவினர் வீட்டிற்கு செல்லும் வாய்ப்பு கிடைக்காது என்றால் அவப்போது போவேன். நான் சொல்வது போல் எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றும் உஷாவின் கணவர் செல்வம் வெளிநாடு சென்ற பிறகு நானும், எனது உறவினர்களும் சேர்ந்து இந்த வழக்கின் புகார்தாரருக்கு வேறு திருமணம் செய்து வைத்தோம் என்றால் சரியல்ல. அதனால் தான் உஷாவின் கணவர் வெளிநாட்டிலிருந்து வந்து அவர் அழைத்தும் நாங்கள் அனுப்பவில்லை என்றால் சரியல்ல.

4. உஷாவிற்கு குழந்தை பிறந்தது என்றால் சரிதான். அது வேறு ஒரு கணவருக்கு பிறந்தது என்றால் சரிதான். மேற்படி சங்கதியிலிருந்து தப்பிப்பதற்காக உண்மைக்கு மாறான புகாரை நாங்கள் கொடுத்தோம் என்றால் சரியல்ல. அதிலிருந்து நாங்கள் தப்புவதற்காக இவ்வாறு சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>குறுக்கு விசாரணை</u>**

**குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டது.**

சாட்சி சொல்லி என்னால் எடுத்துச் சொல்லப்பட்டு, தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் முன்னிலையில் மேற்படி சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரியானதென்று ஏற்கப்பட்டது.

நீதித்துறை நடுவர்,
இரணியல்.